# ஜனவரி – 24 – வியாழன்

**புனித பிரான்சிஸ் சலேசியார்**

**என் கடவுளே! உமது திருவுளம் நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்: திபா. 40:8**

## முதல் வாசகம் : எபிரேயர் 7 : 25 ---- 8 : 6

சகோதரர் சகோதரிகளே, தம் வழியாகக் கடவுளிடம் வருபவரை அவர் முற்றும் மீட்க வல்லவராயிருக்கிறார் அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே உயிர் வாழ்கிறார். இத்தகைய தலைமைக் குருவே நமக்கு ஏற்றவராகிறார். இவர் தூயவர், கபடற்றவர், மாசற்றவர், பாவிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, வானங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர். ஏனைய தலைமைக் குருக்கள் செய்வது போல, முதலில் தம்முடைய பாவங்களுக் காகவும் பின்னர் மக்களுடைய பாவங்களுக்காகவும் இவர் நாள்தோறும் பலி செலுத்தத் தேவையில்லை. ஏனெனில் தம்மைத் தாமே பலியாகச் செலுத்தி இதை ஒரே ஒருமுறைக்குள் செய்து முடித்தார். திருச்சட்டப்படி வலுவற்ற மனிதர்கள் குருக்களாக ஏற்படுத்தப்படுகிறார்கள். ஆனால் அத்திருச்சட்டத் திற்குப் பின்னர், ஆணையிட்டுக் கூறப்பட்ட வாக்கின் மூலம் என்றென்றும் நிறைவுள்ளவரான மகனே குருவாக ஏற்படுத்தப் படுகிறார். இத்தகைய தலைமைக் குரு நமக்கு வாய்த்துள்ளார் என்பதே இதுகாறும் நாம் கூறியவற்றின் தலையாய கருத்து. இவர் விண்ணகத்தில் பெருமைமிகு கடவுளுடைய அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். அங்கே மனிதரால் அல்ல, ஆண்டவராலே அமைக்கப்பட்ட உண்மையான கூடாரமாகிய தூயகத்தில் ஊழியம் செய்கிறார். ஒவ்வொரு தலைமைக் குருவும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தவே ஏற்படுத்தப் பட்டிருக்கிறார். எனவே பலி செலுத்துவதற்கு இவரிடமும் ஏதேனும் ஒரு பொருள் கட்டாயம் இருக்க வேண்டும். உலகிலேயே இருந்திருப்பாரென்றால் இவர் குருவாக இருந்திருக்கமாட்டார். ஏனெனில், திருச்சட்டத்தின்படி காணிக்கைகளைச் செலுத்த ஏற்கெனவே இங்குக் குருமார்கள் இருக்கிறார்கள். இவர்கள் வழிபடும் இடம் விண்ணகக் கூடாரத்தின் சாயலும் நிழலுமே. மோசே கூடாரத்தை அமைத்தபோது, ”மலையில் உனக்குக் காண்பிக்கப்பட்ட முறைப்படி நீ இவற்றையெல்லாம் செய்யுமாறு கவனித்துக்கொள்” என்று கடவுள் பணித்தது இதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால், இவரோ அவர்களுடைய குருத்துவப்பணியை விட மிக மேன்மையான குருத்துவப் பணியைப் பெற்றிருக்கிறார். ஏனெனில் சீரிய வாக்குறுதிகளின் அடிப்படையில் செய்யப்பட்டு, இவரை இணைப்பாளராகக் கொண்டிருக்கும் உடன்படிக்கை முந்திய உடன்படிக்கையைவிட சிறப்புமிக்கது.

**பதில்பாடல் :** என் கடவுளே உம் திருவுளம் நிறைவேற்ற இதோ வருகிறேன்.

## நற்செய்தி : மாற்கு 3 : 7 - 12

அக்காலத்தில் இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தம் சீடருடன் கடலோரம் சென்றார். கலிலேயாவிலிருந்து பெருந்திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். மேலும் யூதேயா, எருசலேம், இதுமேயா, யோர்தான் அக்கரைப்பகுதி, தீர், சீதோன் ஆகிய இடங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் அவர் செய்தவற்றை யெல்லாம் கேள்வியுற்று அவரிடம் வந்தனர். மக்கள் கூட்டம் தம்மை நெருக்கிவிடாதவாறு தமக்காகப் படகு ஒன்றை முன்னேற்பாடாக வைத்திருக்குமாறு அவர் சீடருக்குச் சொன்னார். ஏனெனில், பலரை அவர் குணமாக்கியதால், நோயுற்றோர் அனைவரும் அவரைத் தொடவேண்டுமென்று வந்து அவர்மீது விழுந்து கொண்டிருந்தனர். தீய ஆவிகளும் அவரைக் கண்டபோதே அவர்முன் விழுந்து, ”இறைமகன் நீரே” என்று கத்தின. அவரோ, தம்மை வெளிப்படுத்த வேண்டாமென அவற்றிடம் மிகக் கண்டிப்பாய்ச் சொன்னார்.

**தியானம்:** இயேசுவின் நற்செய்தி அறிவிப்புப் பணி உண்மையிலே நற்செய்தியை அறிவிக்கின்ற மக்களுக்கெல்லாம் சிறந்த உதாரணமாக திகழக்கூடிய பணியாகும். இயேசு மக்கள் நடுவில் போதிக்கின்றார். மக்கள் அவரது போதனையின் மகிமையில் கட்டுண்டு உணவே வேண்டாம் என்ற அளவுக்குக் கூட அவர் பின்னால் செல்கின்றார்கள். அதனால் அவருக்கு அதிகார வர்க்கத்தினரிடமிருந்து எதிர்ப்பு வருகின்றது. ஆனால் இயேசு அவர்களை எதிர்க்கவில்லை. மாறாக அவர் தனது இலக்கை அடைவதில் புதிய திட்டங்களை உருவாக்குகின்றார். இயேசுவின் பெயரைக் கேள்விப்பட்டு ஏராளமான மக்கள் அவரைத் தேடி வருகின்றார்கள். அவர்களின் முதன்மையான நோக்கம் தங்கள் தேவையை நிறைவேற்றிக் கொள்வதாகும். அவர்கள் உடல் சுகத்தைப் பெறவேண்டும் என்று நினைக்கின்றார்கள். இயேசுவைப் பார்த்தவுடன் அவரைத் தொடவேண்டும் என்று முண்டியடித்துச் செல்கின்றார்கள். இயேசு அவர்களின் தேவைகளை அறிந்து அவர்களை குணமாக்குகின்றார். நற்செய்திப் பணி ஆற்றுகிற போது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் நாம் அதிக அக்கறை எடுக்கவேண்டும். தியாக உள்ளத்தோடு பணியாற்ற வேண்டும் என்பதனை இங்கு அறிந்து அதன்படி வாழ முயற்சி செய்வோம் ஆமென்.